பூஜாபிடிய பிரதேச சபை
கண்டி மாவட்டம்

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019மார்ச் 29 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின்முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைபிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்துநிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் பூஜாபிடிய பிரதேச சபையின் நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.3.1 கணக்கீடு குறைபாடுகள

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு கிடைத்த 13 விளையாட்டு உபகரண உருப்படிகளின் பெறுமதியை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கண்க்கீடு செய்ய வேண்டும். | பெறுமதி கிடைத்த பின் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | நன்கொடையாக கிடைத்த ரூபா 624,268 பெறுமதியான Weight Plate தொகுதியொன்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கண்க்கீடு செய்ய வேண்டும். | சரியாக கண்க்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | 07 கருத்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 771,601 ஆன தொகை மூலதன கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கண்க்கீடு செய்ய வேண்டும். | சரியாக கண்க்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | 2013 ஆண்டில் மேற்கொள்ள வேண்டிய ரூபா 500,000 பெறுமதியான 02 வேலைகள் மேற்கொள்ளப்படாமல்கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோராக குறிப்பிடப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய வேலைகளை பூர்தி செய்து கொள்ள வேண்டும். | இவ் வேலைகளை மகா சபைக்கு சமர்பித்து, பதிவலிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

1.3.2 எதிர்பாராத பொறுப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதியில் சபையினால் மற்றும் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள 16 வழக்குகள் தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | வழக்குகள் பற்றிய தகவல்களை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். | நிதிக் கூற்றுக்களில் பெளிப்படுத்தாமை தவறு என ஏற்றுக் கொள்கிறேன். |

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிக் கூற்றுக்கள் பிரகாரம், 07 கணக்கு விடயங்களின் மீதிகளை துணை பதிவேடுகளுடன் இணக்கஞ் செய்கையில்,ரூபா 122,600 ஆன இணங்காமை நிலவியது. | குறித்த மீதிகளின் வித்திதயாசத்தை சரிசெய்து கணக்குகளை சீர் செய்ய வேண்டும். | துணை பதிவேடுகளை தயாரிக்கும் போது, ஏற்பட்டுள்ள தவறை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) பெற வேண்டிய கணக்குகள

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 05 ஆண்டுகளை விஞ்சிய கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 163,073 ஆனது. | கிடைக்க வேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும் | ஓர் பகுதி அறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய நிலுவையை அறவிட திட்டமிடப்பட்டுள்ளது. |

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள

| | | |
| --- | --- | --- |
| 05 ஆண்டுகளை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 3,300,522 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க வேண்டும் | சபை அங்கீகாரத்துடன் அல்லது குழு அறிக்கை பெற்றுக் கொண்டதன் பின்னர் செலுத்த அல்லது பதிவலிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

1.3.5 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 04 கணக்கு விடயங்களின் நிலையான சொத்து பதிவேடு, இருப்பு பதிவேடு,மீதி உறுதிப்பாட்டு கடிதம், துணைப் பதிவேடுகள் மற்றும் ஒப்பந்தங்கள் போன்ற தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாததால், கூட்டுத் தொகை ரூபா 48,453,787 ஆன கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். | காணி மற்றும் கட்டிட நிலையான சொத்து பதிவேட்டை சரி செய்துள்ளதுடன்,குழாய் கிணறு இருப்பு தொடர்பாக நி.பி.104(4) பரிசோதனையொன்று மற்றும் தகவல்கள் அறிவதற்காக விஷேட பரிசோதனையொன்று மேற்கொண்டுள்ளதனால், அவ் அறிக்கை கிடைத்த பின்னர் மீதி உறுதிப்பாட்டினை சமர்ப்பிக்கிறேன். செலுத்த வேண்டிய ஓய்வுதிய பங்களிப்பு நிலுவை தொடர்பான மீதி உறுதிப்பாட்டு ஆவணங்கள் கிடைத்த பின்னர் தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

1.4 இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும்முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி 218 | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக் | கட்டிடங்கள் கணிப்பாய்வொன்று செய்ய வேண்டும். | கணக்காய்வினூடாக சுட்டிக்காட்டியதன் பின்,காணி மற்றும் கட்டிடங்கள் கணிப்பாய்வொன்று |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | கவில்லை. | | மேற்கொள்ளப்பட்டது. |
| (ஆ) | 2016 மார்ச் 17 ஆம் திகதிய 2016/03 இலக்க மத்திய உள்ளூராட்சி ஆனையாளரின் சுற்றறிக்கையின் 10 பிரிவு. | | கடையறைகள் உப குத்தகைக்கு வழங்க முடியாததுடன், பூஜாபிடிய வியாபார கட்டிட தொகுதியில் 24 கடையறைகள் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உப குத்தகைக்கு வழங்கபட்டுள்ளமை சான்றுகளுடன் உறுதிப்படுத்தப்பட்டவர்கள் தொடர்பாகஉள்ளூராட்சி ஆனையாளரின் சுற்றறிக்கை 2016/03 பிரகாரம் நடவடிக்கை எடுக்கிறேன். |
| **(இ)** | 2014 திசெம்பர் 29 ஆம் திகதிய 25/2014 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை. | | | | |
| | | (i) | 12 கள தொழிலாளிகள் ஆட்சேர்க்கப்பட்டு அவற்றில் 06 பேர்கள் அலுவலக வேலைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | பதவியின் தன்மை பிரகாரம், கடமைகள் ஒப்படைக்கப்படவேண்டும். | 04 பேர்கள் அலுவலக வேலைகளுக்கு ஈடுபடுத்தப்படுள்ளதுடன், வெற்றிடங்கள் நிரம்பியதன் பின்னர் தொழிலாளிகளை நூலகத்திற்கு இணைக்கிறேன். |
| | | (ii) | 2014 ஆண்டு ஆட்சேர்க்கப்பட்ட இரண்டு தொழிலாளர்களை உறுருதிப்படுத்துகையில், பாடசாலை விட்டுச் செல்லும் சான்றிதழ் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது. | கல்விச் சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு பதவி உறுதிப்படுத்தப்படல் வேண்டும். | தேவையான 05 ஆம் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டுள்ளதனை உறுதி செய்து கொள்ள முடியாமையினால், பாடசாலை விட்டுச் செல்லும் சான்றிதழ் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானசபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 11,721,181ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 12,787,258ஆனது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாகமுன்வைக்கப்பட்டமதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i | வீத வரி மற்றும் குத்தகை | 3,113,959 | 3,187,984 | 2,523,167 | 2,744,670 | 6,770,000 | 12,484,060 | 8,276,425 | 17,044,620 |
| ii | வாடகை | 3,957,540 | 2,578,603 | 2,727,587 | 364,976 | 1,473,000 | 1,280,180 | 1,205,740 | 800,262 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 7,217,100 | 2,449,000 | 2449,000 | - | 1,301,000 | 1,411,600 | 1,411,600 | - |
| iv | ஏனைய வருமானம | 17,221,000 | 17,366,135 | 7,243,607 | 28,642,420 | 29,000,000 | 32,857,590 | 38,963,237 | 15,584,440 |
| | கூட்டுத் தொகை | 26,509,594 | 25,581,725 | 14,943,361 | 31,752,066 | 38,544,000 | 48,033,430 | 49,857,002 | 33,429,322 |

### 2.2.2 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பூஜாபிடிய வியாபார கட்டிடத் தொகுதியில் 26 கடையறைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,825,500 ஆன தொகையொன்று நிலுவையாக நிலவியது. | நிலுவை கடை வாடகை வருமானத்தை சேகரித்துக்கொள்ள வேண்டும். | உள்ளூராட்சி ஆனையாளரின் ஆலோசனை பிரகாரம் 2019 ஏப்ரில் 09 ஆம் திகதி மகா சபை தீர்மானம் உ:1:3 இலக்கத்தின் கீழ் குறித்த பணத்தை கைவிட தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ளதுடன், அங்கீகாரத்திற்காக மதிப்பிற்குரிய ஆளுநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | அம்பதென்ன வியாபார கட்டிடத் தொகுதியில் 04 ஆம் இலக்க கடையறையிலிருந்து 2001 ஆண்டு முதல் அறவிட வேண்டிய ரூபா 140,840 ஆன வாடகை 2018 திசெம்பர் 31 திகதி வரை நிலுவையாக நிலவியது. | நிலுவை கடையறை வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டு ரூபா 95,000 அறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய நிலுவையை செலுத்த 02 மாதகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. |

2.2.3 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 திதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,221,788ஆனதுடன், முத்திரைக் கட்டணம் ரூபா 27,420,632 ஆனது. | நிலுவை வருமானம் சேகறிப்பதன் செயலாற்றலை மேம்படுத்த வேண்டும். | நிலுவை வருமானத்திலிருந்து ரூபா 4,654,110 ஆன வருமானமொன்று 2019 ஆண்டில் சேகரிக்கப்பட்டுள்ளது. |

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும்,மக்கள் நலன், இலகுமற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ)** துணைச் சட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முட்சக்கர வண்டி தவிர ஏனைய வாகண தரிப்பிட கட்டணம் அறவிடும் முறைமை ஒன்றை மீளாய்வாண்டு இறுதி வரையும் இனங்கண்டிருக்கவில்லை. | முட்சக்கர வண்டி தவிர ஏனைய வாகணங்கள் தொடர்பாக கட்டணம் அறவிடும் முறைமை ஒன்றை அறிமுகம் செய்ய வேண்டும். | தரிப்பிடங்களை இனங்காண மற்றும் புதிய துணை சட்டம் ஒன்றை வரையும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ)** கழிவுப் பொருள் முகாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை உக்கடையும் கழிவுகளினால் இயற்கை பசளை உற்பத்தி செய்ய அல்லது வேறொறு மீள்சுளற்சி முறையொன்றை கடைபிடிப்பது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | இயற்கை பசளை உற்பத்தி செய்ய அல்லது வேறொறு மீள்சுளற்சி முறையொன்றை கடைபிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கழிவுகளை பெளியிட இனங்காணடுள்ள எனசல்வத்த காணியை சுவீகரித்துக் கொள்ள தேவையான ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்படுகிறது. |

**(இ)** நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 14 திகதிய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சின் இலக்கம் NP/SP/SDG/17 கொண்ட சுற்றறிகை பிரகாரம், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிகை பிரகாரம், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | 2018 ஆண்டின் போது, இது தொடர்பாக ஒழுங்காக அறிந்திருக்காததுடன், 2019 ஆண்டு பாதீடு தயாரிக்கும் போது, அது தொடர்பாக கவனம் செலுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. |

3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 24 வெற்றிடங்கள்காணப்பட்டன. | 24 வெற்றிடங்ளை நிரப்ப ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆட்சேர்க்க உள்ளுராட்சி ஆணையாளரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. |

3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார பிரதேசத்தில் 22 சமுதாய நீர் கருத்திட்டங்களில் நீர் மாதிரிப் பரிசீலனையின்றி விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. | நீர் மாதிரி பரிசீலனையினூடாக நீர் விநியோகிக்கநடவடிக்கைக எடுக்க வேண்டும். | சமுதாய நீர் திணைக்களத்தினால் வழங்கப்படும் நீர் பரிசீலனைகள் தொடர்பான அறிக்கையை,எதிர்காலத்தில் அத்திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 03 வியாபார கட்டிடத் தொகுதிகளிற்குரிய 66 கடையறைகளிலிருந்து 2001 முதல் 2016 ஆண்டு வரை புதிய வாடகை மதிப்பீடொன்று மேற்கொள்ளாது,ரூபா 1000 ஆன மாதாந்த கட்டணமொன்று தொடர்ந்தும் அறவிடப்படுகிறது. | கடை வாடகை மதிப்பீட்டினூடாக கடையறை வாடகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை கடை வாடகை மதிப்பீட்டை 2018 நவம்பர் மாதம் முதல் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3.4 சொத்துக்கள் முகாமை

3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பபை உறுதிப்படுத்தப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாரதுகொட கிராம சபை கட்டிடம் அமைந்துள்ள காணியின் சட்டபூர்வ உரிமையை உறுதி செய்ய தேவையான ஆவனங்கள் சபையிடம் காணப்படவில்லை. | சொத்துக்களின் தெளிவான உரிமையை உறுதிப்படுத்தும் சட்டரீதியான ஆவனங்கள் சபையில் வைத்துக்கொள்ள வேண்டும். | நூலக கட்டிடம் அமைந்துள்ள இடம் தொடர்பான வழக்கு பிரகாரம், அளவையிடலின் போது, தெளிவான உரிமையொன்றுள்ளது. |
| (ஆ) | சபைக்கு சொந்தமில்லாத நிலங்களில் கட்டிடங்கள் நிர்மாணிப்பதன் காரணமாக, தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கிற்காக அன்மித்த கடந்த 06 வருடங்களினுள் செலுத்தப்பட்ட ரூபா 67,000 சட்ட செலவினம் சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டமொன்று என காண்பிக்கப்பட்டன. | சொத்துக்ளின் உரிமையை உறுதிப்படுத்திக் கொண்டு நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளல். | நிர்மாணிக்கும் சந்தர்ப்பத்தில் சபையினால் உரிமையை உறுதி செய்ய கொள்ள வேண்டிய போதும், அவ் விடயம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. |
| (இ) | அம்பதென்ன வியாபார கட்டிடத் தொகுதி அமைந்துள்ள காணிக்காக பெளிப்படுத்தல் உறுதியொன்று இருந்த போதும் முறையான உறுதியொன்றினால் உரிமை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்ளின் உரிமையை முறையாக உறுதிப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொடர்ச்சியான 17 வருட கால பாவனையினூடாக சபைக்கு பாவனையின் மீதான உரிமை உரித்தாகின்றது. அதனால், அவ் உரிமையை நீதிமன்றத்தினூடாக எதிர் காலத்தில் உறுதி செய்து கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |

3.4.2 சொத்துக்களிலிருந்த பெற வேண்டிய வருமானத்தை பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பூஜாபிடிய வியாபார கட்டிடத்தொகுயின் 04 கடையறைகள் 2001 முதல் மூடப்பட்டிருந்ததனால், கடந்த 02 ஆண்டுகளிற்கு மாத்திரம்ரூபா 480,000 ஆன தொகை சபைக்கு இலக்கப்பட்டிருந்தது. | கிடைக்க வேண்டிய வருமானத்தை இனங்கண்டு அவ்வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டு 02 கடையறைகள் டென்டர் மூலம் வழங்கப்பட்டுள்ளது. |

3.4.3 விளைவற்ற/குறைபயன்பாட்டுச் சொத்தக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 18,055,662 பெறுமதியான 03 வாகனங்கள் மற்றும் 03 இயந்திரஉபகரணங்கள் ஓராண்டை விஞ்சிய காலமாக செயலற்று மற்றும் குறைபயன்பாட்டுடன் நிலவின. | விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுடனான சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். | பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின் எதிர்காலத்தில்,அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கிறேன். |

3.4.4 வருடாந்த பொருட் கணிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2013 ஆண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட பொருட் கணிப்பீட்டின் பிரகாரம், குழாய்க் கிணறு கழஞ்சியத்தில் ரூபா 657,422 பெறுமதியான 33 உபகரணங்களில் 60 உருப்படிகளின் நிலவிய பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பண்டக கணிப்பீட்டு அறிக்கை பரிந்துரை செயற்படுத்தபட வேண்டும். | அறிக்கையை துரிதமாக பெற்றுதருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |

3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் கழிவுப் பொருள் முகாமை வேலைத்திட்டத்திற்காக எனசல்மட காணியிலிருந்து 09 ஏக்கர் 01 ரூட் நில அளவொனறை கொள்வனவு செய்வதற்கு ரூபா 400,000 ஆன தொகையொன்று 2013 ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டு இறுதி வரையும் காணியை சுவீகரித்துக்கொண்டு கருத்திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை சட்டரீதியாக சுவீகரிப்பதற்கும் மற்றும் கருத்திட்டத்தை உரிய காலத்தினுள் ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின் முன் நடவடிக்கை மேற்கொள்கிறேன். |